## பிப்ரவரி - 23

**"நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்." - சங் 32 : 8**

ஜீவியத்தின் எல்லாக் காரியங்களிலும் வழி நடத்தப்படுவதற்காகக் கர்த்தரைச் சார்ந்திருக்க வேண்டும் என்பதே ஆவிக்குரிய இஸ்ரவேலர் கற்றுக் கொள்ள வேண்டிய மிகவும் முக்கியமான பாடங்களில் ஒன்றாகும். கையிட்டுக் கொள்ளும் உலக சம்பந்தமான அல்லது ஆவிக்குரிய எந்த வேலையையும் செய்ய அதன் சம்பந்தமாகக் கர்த்தரின் சித்தத்தைக் கவனிக்க நாடாமல் ஒருபொழுதும் முயற்சி செய்யக்கூடாது. நாம் கானானை நோக்கி நடந்து கொண்டிருக்கிறோம். நாம் வாக்குத்தத்தங்களை சுதந்தரிப்பதற்கு முன்னர், நம்மை சேர வேண்டியதும் அனுபவிக்க வேண்டியதுமான மற்ற அனுபவங்களும் உண்டு என்று அறிகிறோம். நமக்குரிய படிப்பினை என்னவென்றால், முறுமுறுக்காமல், அதாவது நிறைவான மகிழ்ச்சியுடன் கர்த்தரின் வழி நடத்துதல்களுக்கு உடனடியாகவும் பூரணமாகவும் கீழ்ப்படிவதாகும். தங்களுக்கு இதற்கு முன்பு கொடுக்கப்பட்ட படிப்பினைகளையும், எல்லாவற்றிற்கும் மேலாக, கர்த்தருடைய வல்லமை, காருண்யம், உண்மை ஆகிய இவைகளில் விசுவாசமும் நம்பிக்கை கொண்டிருக்கவும், யார் கற்றிருக்கிறார்களோ அவர்களிடமிருந்துதான் இதை எதிர்பார்க்கலாம்.

**- Z ’02, 251, 249 (R 3062, 3061).**

நமது பரமபிதா தம்முடைய பிள்ளைகளை தங்களுடைய ஜீவியத்தின் ஓட்டத்தில் ஓட பழக்குகிறார். மூன்று வழிகளை உபயோகப்படுத்தி அவர் பயிற்சி அளிக்கிறார். ஆரம்பப் பாடம் அவருடைய வார்த்தை. அதன்படி அவர் அவர்களுடைய மனதை பிரகாசிப்பித்து அவர்களுடைய இருதயங்களை நடத்துகிறார். இரண்டாவது பாடம் அவருடைய ஆவி அதன்படி அவர்களை அறிவிலும், குணத்திலும், ஊழியத்திலும் அவர்களுக்கு சக்தி கொடுத்து ஊக்கமளிக்கிறார். மூன்றாவது பாடம் அவருடைய பராமரிப்புகள் இந்தப் பராமரிப்புக்களின் மத்தியில், தங்களுடைய இருதயத்தின் மனதின் வெவ்வேறு தன்மைகளின் பயிற்சி மூலமாக வல்லமையினாலும், அவருடைய வார்த்தைக்கு அனுசரணையாகவும் தங்களுடைய குணங்களை அபிவிருத்தி செய்ய அவர்களுக்கு சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படுகின்றன. இவ்விதமாக அவருடைய ஞானம் அவர்களுடைய நடத்தையில் அவர்களை வழி நடத்துகிறது. **– P ’33, 16.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யாத் 13:21; 15:13; 33:13-15; சங் 23:2,3; 25:5,8,9; 27:11; 31:3; 48:14; 73:24;78:52; 107:7; 139:9,10,24; நீதி 8:20; ஏசா 40:11; 42:16; 48:17; 54:13; லூக் 1:79; யோவா 10:3,4; 16:13.

**கோபுர வாசிப்பு : Z ’11, 223 (R 4858)**

**வினாக்கள் :** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வாரத்தின் அனுபவம் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அதனுடன் வந்த உதவிகள் இடையூறுகள் எவை? அவை எவ்வாறு என்னைப் பாதித்தன?